## 7. தலைப்பு 5 – அமைச்சரவை அலுவலகம்

-----------------------------------------------------------------------

### 7.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

----------------------------------

#### 7.1.1 பாதீட்டு முரண்கள்

------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நான்கு செலவின விடயங்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 5,925,000 மொத்த தேறிய நிதி ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பதினான்கு செலவின விடயங்களுக்கு மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 11 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது.

### 7.2 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

-----------------------------------------------------------------

#### 7.2.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

----------------------------------------------------------------------

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் அலுவலகத்தினால் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 7.2.2 வருடாந்த கொள்வனவுத் திட்டம்

--------------------------------------------------------

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 7.2.3 உள்ளகக் கணக்காய்வு

-----------------------------------------

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.2.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டிருக்கவில்லை.

### 7.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

**வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அலுவலகத்தினால் 2015 மே 31 ஆந் திகதியளவிலும் அந்த அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 7.4 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்துதல்

செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடப்பட்டமை தொடர்பான தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின்போது வெளிப்படுத்தப்பட்ட சந்தர்ப்பமொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) செயற்திட்டத்தை ஆரம்பிக்காது கைவிடல்

அலுவலகத்தால் பின்வரும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

| **செயற்திட்டம்** | **மதிப்பிடப்பட்ட கிரயம்** | **ஆரம்பிக்கப்பட வேண்டிய திகதி** | **ஆரம்பிக்கப்படாமைக்கான காரணம், சுருக்கமாக** |
|---|---|---|---|
| | ரூபா | | |
| பதிவேடுகளை பாதுகாத்தலும் முகாமைத்துவ முறைமையினைத் தாபித்தலும் | 5,000,000 | 2012 | செயற்திட்டத்தின் விடயப் பரப்பை விரிவுபடுத்தல் தொடர்பான செயற்திட்டத்தை மீளத் திட்டமிட வேண்டியமை காண்பிக்கப்பட்டிருந்தது. |

## 7.5 முகாமைத்துவ நலிவுகள்

நடைமுறையல்லாச் சொத்துக்களின் அசைவு அறிக்கைக்கும் நிலையான சொத்துப் பதிவேட்டில் வாகனங்களின் ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 258,950 ஏனைய சொத்துக்களுக்கிடையே ரூபா 862,931 என வேறுபாடுகள் காணப்பட்டன.

## 7.6 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 17 | 11 | 06 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 05 | 05 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 32 | 20 | 12 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 32 | 26 | 06 | - |
| (v) | ஏனையவை(அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 06 | - | 06 |
| | மொத்தம் | 91 | 68 | 29 | 06 |

மீளாய்வாண்டின் இறுதியளவில் 29 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் ஒப்பந்த அடிப்படையில் 06 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.